**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, RANIPET. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII, Cr.P.C)

**SPLCC.No.18/2025 - PW-34**

| | |
|---|---|
| Name | திருமதி.ரமாதேவி |
| Husband Name | அருணாச்சலம் |
| Village /Area | Tajpura / Arcot |
| Taluk | Arcot Taluk |
| Occupation | – |
| Age | 45 |
| Religion | Hindu |
| Aadhar Card No. | 255007106484 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 13.11.2025.

**3 முதல் 10 மற்றும் 12, 15 எதிரிகள் ஆஜர். 11, 13 எதிரிகள் ஆஜர் இல்லை. பா.நா.சு.ச பிரிவு 355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**

**முதல் விசாரணை –**

நான் வருவாய் துறையில் ஏற்கனவே தற்காலிகமாக ஆற்காடு வட்டாட்சியர் அலுவலகத்தில் தகவல் பதிவாளராக பணிபுரிந்தேன். தற்போது நான் எந்த பணியும் செய்யாமல், வீட்டுக்குடித்தனம் செய்துகொண்டு, ஆற்காட்டில் வசிக்கிறேன். 02.09.2009 தேதி முதல் நான் ஆற்காடு வட்டாட்சியர் அலுவலகத்தில் தகவல் பதிவாளராக தற்காலிகமாக 2012ம் ஆண்டு வரை பணிபுரிந்தேன். அதன் பிறகு, வாலாஜா வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சென்று பணிபுரிந்தேன். என்னுடைய பணி வட்டாட்சியர் அலுவலகத்தில் கவுண்டரில் சிட்டா நகல் கோரும் மனுக்களை பெறுவதாகும். அந்த மனுவின் பேரில் பட்டாவை கணினியில் பார்த்து பட்டாவில் உள்ள பெயரும், பட்டா எண்ணும் சரிபார்த்து மனுதாரரிடம் கட்டணமாக ரூ.20

வசூலித்துக்கொண்டு, சிட்டா நகல் பிரிண்ட் எடுத்து, சிட்டா பதிவேட்டில் பதிவு செய்வேன். அதன் பிறகு அதனை மண்டல துணை வட்டாட்சியர் பார்வைக்கு வைப்பேன். இந்த வழக்கு சம்மந்தமாக 2012ம் ஆண்டு வேலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் என்னை விசாரித்தார். ஆய்வாளர் என்னிடம் காண்பித்த கந்தசாமி மகன் பெருமாள் என்பவரின் சிட்டா நகல் எங்கள் அலுவலகத்தில் உள்ள கணிணியில் இருந்து பிரிண்ட் எடுத்து வழங்கப்பட்ட சிட்டா அல்ல என்றும், எங்கள் அலுவலகத்தில் பிரிண்ட் எடுத்து சிட்டா வழங்கினால் அதில் தேதி, நேரம், அலுவலக மென்பொருள் code வரும் என்றும் சொன்னேன். அதனால் அந்த சிட்டா போலியானது என்று சொன்னேன். அந்த சிட்டாவிற்கான மனுவினை ஆய்வாளர் கேட்டதால் அலுவலகத்தில் தேடினோம். அந்த மனு பதிவறையில் இல்லை. இது சம்மந்தமாக என்னை வேலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை 3 முதல் 11, 13, 14 எதிரிகள் தரப்பில் –**

நான் பணியில் சேர்ந்த பிறகுதான் சிட்டாவில் தேதி, நேரம், அலுவலக மென்பொருள் code வரும் என்று தெரியவந்தது என்றால், சரிதான். அதற்கு முன்பு எவ்வாறு சிட்டா நகல் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால், சரிதான். நான் பணியில் சேருவதற்கு முன்பு சிட்டா நகல் கொடுத்திருந்தால் அதன் உண்மைத்தன்மை குறித்து என்னால் சொல்ல இயலாது என்றால், அது சரிதான். சிட்டா நகல் கொடுத்தது குறித்து அலுவலக கணினியில் நான் தேடிபார்த்தேனா என்றால், எனக்கு நினைவில்லை.

**குறுக்கு விசாரணை 12, 15 எதிரிகள் தரப்பில் –**

3 முதல் 11, 13, 14 எதிரிகள் தரப்பிலான குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக வழக்கறிஞர் தெரிவித்தார்.

**மறு விசாரணை –**

இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness and admitted by him/her to be correct.

M SELVAM

Principal District Judge, Ranipet
Digitally signed by M SELVAM
DN: cn=M SELVAM, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

Principal District and Sessions Judge,
Ranipet